Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.
**S.C.No. 38 of 2025**

| | | |
|---|---|---|
| | } | Prosecution |
| Deposition of P.W.18 (L.W. 19 ) | } | Defence |
| | } | |
| Name of the Witness | : | திரு.முருகன் |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 03.06.2026.

7ம் எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு எற்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் கடந்த 30.04.2026ம் தேதி வரை தருமபுரி மாவட்டம், கோட்டப்பட்டி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று விட்டேன். நான் தற்போது அரூரில் வசித்து வருகிறேன். நான் கடந்த 12.05.2024ம் தேதி மாரண்டஅள்ளி காவல்

நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது காலை 08.00மணியவில் பாலக்கோடு அரசு மருத்துவமனையிருந்து வரப்பெற்ற தகவலினை பெற்று, காலை 09.00 மணியளவில் அரசு மருத்துவமனை சென்றேன். அங்கு உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்த பாலக்கோட்டை சேர்ந்த சுமார் 55 வயதுடைய பெருமாள் மகன் கோவிந்தன் என்பவரை பார்த்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதில் புகார்தாரர் கோவிந்தனின் கையெழுத்து பெற்று, காலை 10.00மணியளவில் நிலையம் வந்து நிலைய குற்ற எண் 98/2024 ஆக சட்டபிரிவுகள் 147, 148, 294(பி), 324, 307 இதச படி வழக்கு பதிவு செய்தேன். அதற்கான முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.26** ஆகும். வழக்கு கோப்பினை புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். காவல ஆய்வாளா விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**1, 7 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் மருத்துவமனை சென்று வாதியை விசாரிக்கும் போது அவர் நல்ல ஆரோக்கியமான மனநிலையில் தான் இருந்தார் என்றால் சரிதான். மருத்துவமனை விபத்து பதிவேட்டில் (AR copy) சாலை விபத்தில் காயம் ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு காவல் நிலையத்திற்கு வரப்பட்ட (AR copy) விபத்து பதிவேட்டு நகல் காவல்

நிலைய கோப்பில் வைக்கப்பட்டுள்ளதா, அல்லது நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா என்றால் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். புகார்தாரர் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக வழக்கு பதிவு செய்த காரணத்தில் தான் (AR copy) நீதிமன்றத்தில் சமர்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. மருத்துவமனையிலிருந்து 12.05.2024ம் தேதி காலை 10.00மணியளவில் தான் தகவல் கிடைக்கப்பட்டதாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், எனது முதல் விசாரணை சாட்சியத்தில் 10.00மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளது முன்னுக்கு பின் முரணானது என்றால் சரியல்ல.

3, 4, 6 எதிரிகள் தரப்பில் 1, 7க்கான குறுக்கு விசாரணையை ஏற்று கொள்கின்றனர்.

**2, 5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

அ.சா.ஆ.1ல் பணிந்து அனுப்பப்படுகிறது என்ற வாசகத்திற்கு கீழான சங்கதிகளை யார் எழுதினார்கள் என்றால் நான் தான் எழுதினேன். அ.சா.ஆ.26 முதல் தகவல் அறிக்கையில் 12ம் காலத்தில் மருத்துவமனையிலிருந்து தகவல் கிடைத்த நேரம் மாலை 18.00 மணி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.1ல் புகார்தாரரின் வாக்குமூலம் எழுதப்பட்ட கையெழுத்தும், பணிந்து அனுப்பப்படுகிறது என்ற காலத்தில் உள்ள கையெழுத்தும் வேறு வேறாக உள்ளது என்றால்

சரியல்ல. சம்பவ சமயம் புகார்தாரா் TN 29 L 4669 TVS Victor என்ற வாகனத்தை ஓட்டி வந்ததாக கண்டுள்ளது என்றால் சரிதான். நான் சொன்ன தேதியில். சொன்ன விதத்தில், சொன்ன நேரத்தில் புகார்தாரரிடமிருந்து வழக்கு நிமித்தமாக நான் சந்திக்கவில்லை என்றும், அவரிடமிருந்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றும், இவை அனைத்தும் வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அதேபோல் புகார்தாரர் வாக்குமூலம் எப்போதும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லப்பட்ட சங்கதிகள் எதுவும் அ.சா.ஆ.26ல் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் பொய்யாக தயார் செய்யப்பட்ட ஆவணத்தில் நான் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரியல்ல. புலன் விசாரணை என்னிடம் எவ்வித புலன் விசாரணையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது உயர் அதிகாரிகள் கேட்டு கொண்டதற்கிணங்க அரசு அதிகாரிகளுக்கு அனுகூலமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜா் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் அனைவரும் நிரபராதிகள் என்றால் சரியல்ல.

Sd/Tmt.K.R.Jothi, B.A.,B.L.,
Additional District Judge,
Dharmapuri.